**தலைப்பு 110 - நீதி அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 ஆம் பகுதி | - | அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை |
| 2 ஆம் பகுதி | - | ஒவ்வொரு தலைப்புக்குமான விபரமான அறிக்கை |

## 1 ஆம் பகுதி

**நீதி அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை**

---

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்**

| தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 228 | நீதிமன்றங்களின் நிருவாகம் |
| 231 | கடன் இணக்கசபைத் திணைக்களம் |
| 233 | அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம் |
| 234 | உயர் நீதிமன்றப் பதிவாளர் |
| 235 | சட்ட ஆணைக்குழுத் திணைக்களம் |

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த ஏற்பாடு மற்றும் செலவினம்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 05 திணைக்களங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 6,122,565,051 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 5,927,404,741 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சினதும் ஒவ்வொரு திணைக்களங்களினதும் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 2,223,474 இற்கும் ரூபா 124,010,878 இற்கும் இடையிலான இடைவெளியின் அளவு தேறிய நிதி ஏற்பாட்டில் முறையே 2.28 சதவீதத்திற்கும் 21.38 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக்கொண்டிருந்தது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| தலைப்பு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | சேமிப்பு தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 110 | 809,300,000 | 790,873,344 | 18,426,656 | 2.28 |
| 228 | 4,795,908,625 | 4,671,897,747 | 124,010,878 | 2.58 |
| 231 | 10,400,000 | 8,176,526 | 2,223,474 | 21.38 |
| 233 | 372,556,426 | 335,576,177 | 36,980,249 | 9.93 |
| 234 | 118,100,000 | 107,168,683 | 10,931,317 | 9.25 |
| 235 | 16,300,000 | 13,712,264 | 2,587,736 | 15.87 |
| மொத்தம் | 6,122,565,051 | 5,927,404,741 | 195,160,310 | 3.19 |

### 2.2 முற்பணக் கணக்குகள்

#### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 05 திணைக்களங்களுக்காக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | குறைந்த எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 11001 | 11,000,000 | 11,906,776 | 5,800,000 | 10,844,428 | 48,000,000 | 33,522,929 |
| 22801 | 348,000,000 | 347,826,846 | 166,000,000 | 192,782,705 | 880,000,000 | 683,748,690 |
| 23101 | 1,000,000 | 952,663 | 300,000 | 1,021,407 | 2,400,000 | 1,351,389 |
| 23301 | 7,000,000 | 4,370,710 | 3,500,000 | 4,355,806 | 32,000,000 | 20,060,232 |
| 23401 | 12,000,000 | 11,926,050 | 5,000,000 | 8,100,985 | 42,000,000 | 3,825,065 |
| 23501 | 1,200,000 | 598,575 | 200,000 | 389,745 | 3,000,000 | 2,233,553 |

## 2.3 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்கு

### 2.3.1 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 03 திணைக்களங்களில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 16,444,460 ஆகும். விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| அமைச்சு / திணைக்களம் | கட்டுநிதிக் கணக்கின் இலக்கம் | 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| கடன் இணக்கசபைத் திணைக்களம் | 7002/0000/00/0281/0012/000 | 74,134 |
| உயர் நீதிமன்றப் பதிவாளர் திணைக்களம் | 7002/0000/00/0140/0013/000 | 15,593,270 |
| சட்ட ஆணைக்குழுத் திணைக்களம் | 7002/0000/00/0320/0013/000 | 777,056 |
| மொத்தம் | | 16,444,460 |

### 2.3.2 பொது வைப்புக் கணக்கு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 03 திணைக்களங்களில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,222,021,437 ஆகும். விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| அமைச்சு / திணைக்களம் | வைப்புக் கணக்கின் இலக்கம் | 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| நீதி அமைச்சு | 6000/0000/00/0015/0023/000 | 4,920,076 |
| நீதிமன்றங்களின் நிருவாகம் | 6000/0000/00/0015/0109/000 | 7,131,266,903 |
| அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம் | 6000/0000/00/0015/0113/000 | 36,184,858 |
| உயர் நீதிமன்றப் பதிவாளர் திணைக்களம் | 6000/0000/00/0015/0114/000 | 49,649,600 |
| மொத்தம் | | 7,222,021,437 |

## 2 ஆம் பகுதி

## ஒவ்வொரு தலைப்பு தொடர்பான விபரமான அறிக்கை

### 1. தலைப்பு 110 – நீதி அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

நீதி அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 செப்தெம்பர் 26 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் நீதி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையில் (அ) மற்றும் (ஆ) இலுள்ள பொது அவதானிப்புகள் மற்றும் 1.4 இலிருந்து 1.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒரு செலவின விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபா 200,000 தொகையான மொத்த நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 10 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 25 சதவீதம் தொடக்கம் 97 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

### (ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஓய்வு பெற்றுச்சென்ற நான்கு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 418,983 கடன்தொகை 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவீடுசெய்வதற்கு முடியாதிருந்தது.

(ii) வேலை நீக்கம் செய்யப்பட்ட எட்டு உத்தியோகத்தர்களிடமிருந்து 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிட வேண்டியிருந்த கடன் மீதி ரூபா 576,572 ஆக இருந்தது.

### 1.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

அமைச்சினால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 1,525,741 ஆக இருந்தது.

**(ii) நட்டமும் இழப்பும்**

27 சந்தர்ப்பங்களின் போது ஏற்பட்ட வாகன விபத்துக்கள் தொடர்பாக ரூபா 2,832,405 கூட்டுத்தொகையான நட்டத்தை அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.5 செயலாற்றல்

அமைச்சின் கீழுள்ள திணைக்களமான நீதிமன்றங்களின் நிருவாகத் தலைப்பின் கீழ் 2013 ஆம் ஆண்டிற்காக ரூபா 4,671 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இருந்த போதிலும் அதன் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய தூர நோக்கு, செயற்பணி மற்றும் செயல்முன்னேற்றம் போன்ற விபரங்களை தெளிவாக இனங்காணக்கூடிய வகையில் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 28 | 23 | 05 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 10 | 08 | 02 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 177 | 139 | 38 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 73 | 68 | 05 | - |
| (v) | ஏனையவை (ஒப்பந்த) | - | 02 | - | 02 |
| | மொத்தம் | 288 | 240 | 50 | 02 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 50 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2. தலைப்பு 228 – நீதிமன்றங்களின் நிருவாகம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

நீதிமன்றங்களின் நிருவாக அலுவலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 செப்தெம்பர் 12 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் நீதிமன்றங்களின் நிருவாகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையில் (அ) தொடக்கம் (இ) வரையிலுள்ள பொது அவதானிப்புகள் மற்றும் 2.4 இலிருந்து 2.5 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்

08 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 7 சதவீதம் தொடக்கம் 75 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

### (ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 687,957,755 ஆக இருந்தது. தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை ரூபா 676,193,858 ஆனமையால் ரூபா 11,763,897 தொகையான வேறுபாடு வெளிப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிகளின் கூட்டுத்தொகையுடன் இணக்கஞ் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) தாபனவிதிக் கோவையின் XXIV ஆவது அத்தியாயத்தின் 4.2.4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒரு உத்தியோகத்தர் ஓய்வுபெற்றுச் செல்வதற்கு தீர்மானிக்கப்பட்ட காலத்திற்கு முன் அவரிடமிருந்து அறவிடவேண்டிய சகல கடன் தொடர்பான விபரங்களும் திணைக்களத் தலைவர் ஓய்வூதியப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் தாபனவிதிக் கோவையின் XXIV ஆவது அத்தியாயத்தின 4.2.5 ஆம் பிரிவின் பிரகாரம் உத்தியோகத்தரின் மாற்றப்பட்ட ஓய்வூதியச் சம்பளத்தில் அல்லது

பணிக்கொடையிலிருந்து அறவிட வேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்கில் குறிப்பிடப்பட்டதன் படி அறவிட வேண்டிய ரூபா 541,870 தொகையான கடன் மீதி தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சேவையை விட்டுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 3,749,917 தொகையான கடன் மீதி பல வருட காலமாக தொடர்ச்சியாக முன்கொண்டுவரப்பட்டிருந்ததுடன் அந்த கடன் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் வேலை நீக்கத்திற்குள்ளான உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 7,573,318 கூட்டுத்தொகையான நிலுவை மீதியை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

**(இ) பொது வைப்புக் கணக்கு**

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 25 நீதிமன்ற வலயங்களில் வைப்புக் கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 7,131,266,904 ஆக இருந்ததுடன் அந்த வைப்பு மீதிகளின் தனிப்பட்ட மீதிப் பட்டோலை மற்றும் காலப்பகுப்பாய்வு என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 02 வருடங்களை விஞ்சிய வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. "வழக்கு நடவடிக்கைகள் நீண்ட காலம் முன்கொண்டு செல்லப்பட்டமை, நீதிமன்றங்களில் கணிசமான வைப்பு மீதிகள் காணப்படுகின்றமை போன்ற காரணங்களினால் மேற்கூறப்பட்ட பிரகாரம் நிதிப்பிரமாணம் 571 இன் படி நடவடிக்கை எடுத்தல் துரிதமாக மேற்கொள்ள முடியாதிருந்தது" என அமைச்சின் செயலாளரினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

**2.4 நட்டமும் இழப்பும்**

65 சந்தர்ப்பங்களின் போது ஏற்பட்ட ரூபா 1,288,345 கூட்டுத்தொகையான நட்டத்தையும் இழப்பையும் அறவிடுவதற்கு அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அதில் ரூபா 752,277 தொகை 5 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட கால எல்லைக்குரியதாக இருந்தது.

## 2.5 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 25 | 14 | 11 |
| (ii) | மூன்றாம் நிலை | 26 | 06 | 20 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,008 | 638 | 370 |
| (iv) | ஆரம்ப நிலை | 3,469 | 2,898 | 571 |
| | மொத்தம் | 4,528 | 3,556 | 972 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 972 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. ''நீதிமன்றங்களின் நிருவாகத்தில் ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பாக இந்த அமைச்சிற்கு சில சேவை நிலைகளுக்கு மாத்திரமே நடவடிக்கை எடுக்க முடியும். ஏனைய சேவை நிலை தொடர்பாக நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழுவினாலும் உரிய நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்கக் கூடியதாக இருந்தது'' என அமைச்சின் செயலாளரினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

# 3. தலைப்பு 231 – கடன் இணக்க சபைத் திணைக்களம்

## 3.1 கணக்காய்வின் நோக்கெல்லை

கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 28 ஆந் திகதி திணைக்கள செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 3.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 3.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கடன் இணக்க சபைத்திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 3.4 இலிருந்து 3.5 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளைப் பேணியிருக்காமை

திணைக்களத்தினால் 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பாதீட்டு முரண்**

11 செலவின விடயங்களிற்காக மிகை ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமை காரணமாக ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னரான சேமிப்பு அச் செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாடுகளில் 18 சதவீதத்திற்கும் 68 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்செல்லையில் காணப்பட்டன.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான இணக்கக்கூற்று**

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதிகளின் பெறுமதி திணைக்களப் புத்தகத்திற்கும் திறைசேரிப் புத்தகத்திற்குமிடையே ரூபா 264,955 ஆன வேறுபாடு காணப்பட்டது. நிதிப்பிரமாணம் 427 இன் பிரகாரம் திணைக்களத்தினால் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.4 செயலாற்றல்**

அடகு பிணைமுறிகள் மற்றும் ஏனைய அசையாத ஆதனங்கள் தொடர்பில் செலுத்த வேண்டிய கடன்கள் சம்பந்தமான பிணக்குகளை தீர்த்து வைத்தல் திணைக்களத்தின் பிரதான பணியாக காணப்பட்டதுடன் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி 2013 ஆம் ஆண்டின் செயலாற்றல் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| முன்கொண்டுவரப்பட்டிருந்த தீர்வுகாணப்படாத விண்ணப்பங்களின் எண்ணிக்கை | | 533 |
| புதிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 453 | |
| கிடைத்திருந்த மீளாய்வு விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 31 | |
| | -------- | 484 |
| | | ---------- |
| மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை | | 1,017 |
| இணக்கமேற்படுத்தப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 133 | |
| நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 157 | |
| மீளாய்வுக்குட்படுத்திய விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 20 | |
| சான்றிதழ்கள் வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 03 | |
| கேட்டு விலக்கிக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 19 | |
| | --------- | 332 |
| | | -------- |

| | |
|---|---|
| ஆண்டின் இறுதியில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருக்காத விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 685 |
| | ==== |

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 01 | 01 | - | - |
| இரண்டாம் நிலை | 13 | 08 | 05 | - |
| ஆரம்ப நிலை | 04 | 04 | - | - |
| ஏனையோர் (ஒப்பந்த அடிப்படை) | - | 01 | - | 01 |
| மொத்தம் | 18 | 14 | 05 | 01 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 05 வெற்றிடங்களை நிரப்பவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. தலைப்பு 233 – அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம்

### 4.1 கணக்காய்வின் நோக்கெல்லை

அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 15 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குக்

கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 4.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 4.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையில் (அ) மற்றும் (ஆ) இல் உள்ள பொது அவதானிப்புகள் மற்றும் 4.4 இலிருந்து 4.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) கட்டுநிதிக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) பிரிவிற்கு இணங்காத வகையில் 5 சந்தர்ப்பங்களின் போது 5 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 20,000 இனை விஞ்சி ரூபா 118,400 கூட்டுத்தொகையான செயல்நிமித்தக் கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

(ii) புதிய கட்டிடத்தின் திறப்புவிழாவிற்குத் தேவையான சம்பிரதாய செலவினங்களுக்காக திணைக்களத்தின் உத்தியோகத்தரினால்

பெறப்பட்ட ரூபா 20,000 தொகையான முற்பணத்தில் எவ்வித செலவினமும் செய்யாது ஒரு மாதத்திற்குக் கிட்டிய காலம் நிறுத்தி வைக்கப்பட்டு மீளத் தீர்க்கப்பட்டிருந்தது.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

(i) திணைக்களத்தின் புத்தகங்களுக்கும் திறைசேரிப் புத்தகங்களுக்கும் இடையே 1997 ஆம் ஆண்டு தொடக்கம் காணப்படுகின்ற ரூபா 20,660 தொகையான வேறுபாட்டை இனங்கண்டு சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2007 செப்தெம்பர் தொடக்கம் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 46,054 தொகையான கடன் மீதி 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 4.4 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | |
| XV ஆவது அத்தியாயத்தின் 9.6 ஆம் பிரிவு | - | வெளிநாட்டு சுற்றுலாவில் பங்குபற்றிய குளிர்கால உடைக்கான படிகளைப் பெற்ற எந்த உத்தியோகத்தரும் அந்த உடைகள் பெற்றுக் கொள்ளப்பட்டமையை உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| | ---------------------------- | | |
| | நிதிப்பிரமாணம் 763 | - | பொருள் பெறுவனவுக் குறிப்பு (GRN) மற்றும் பின் அட்டை (Bin Cards) பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபம் | - | திணைக்களத்தின் வாகனங்கள் தொடர்பாக 06 மாதங்களுக்கு ஒரு தடவை எரிபொருள் நுகர்வு தொடர்பாக செய்யப்படவேண்டிய பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபம் | - | இனங்காணல், கணக்கு வைத்தல் மற்றும் சொத்துக்களை நிருவகிப்பதை இலகுபடுத்தும் வகையில் சகல நிலையான சொத்துக்களுக்கும் இலக்கம் இடப்பட வேண்டியிருந்த போதிலும் நிறுவனத்திற்குச் சொந்தமான நிலையான சொத்துக்களுக்கு ஒழுங்குமுறையாக இலக்கம் இடப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2004 சனவரி 26 ஆந் திகதிய 2004/புச/1 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் ஆவணப்படுத்தல் சேவைச் சபையின் ஆலோசனைச் சுற்றுநிருபத்தின் 3.1 ஆம் பந்தி | - | நூலகப் புத்தகங்கள் தொடர்பாக வருடாந்த இருப்பு மெய்மையாய்வு கட்டாயமாக மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் பொருள் மெய்மையாய்வுச் சபை வழங்குகின்ற அறிக்கை ஆலோசனைக்குழுவின் சிபார்சுடன் அதிகாரத்தரப்பினரால் 03 மாதங்களுக்குள் அமுல்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அது தொடர்பாக எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஊ) | 2013 செப்தெம்பர் 01 ஆந் திகதிய sec/2013/07 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சுற்றுநிருபம் | 25,618 சேவையில் ஈடுபட்டிருக்கின்ற சகலரிடமிருந்தும் உழைக்கும் போது செலுத்தும் முறைமையின் கீழ் கழிக்கப்படுகின்ற வரிகள் அதனைத் தொடர்ந்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும் 06 சந்தர்ப்பங்களின் போது 06 மாத காலத்தின் பின்னர் அனுப்பப்பட்டிருந்தது. |

## 4.5 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் முகாமைத்துவ நலிவுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) தினந்தோறும் பயன்படுத்தப்படுகின்ற பொருள் பெறுவனவுகள்/ விநியோகித்தல்களை கணனிமயப்படுத்துவதற்காக 2013 சனவரி மாதம் ரூபா 200,000 தொகை செலவில் தனியார் நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கணனி மென்பொருள் பொருட்பதிவேடு தயாரிப்பதற்காக மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) காலங்கடந்தவையாகத் தீர்மானிக்கப்பட்ட மற்றும் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட இரசாயனப் பொருட்களை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 இன் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் அழிக்கப்பட வேண்டிய 307 புத்தகங்கள், பாதுகாக்கப்பட வேண்டிய 1,629 புத்தகங்கள், கட்டப்பட வேண்டிய 343 புத்தகங்கள் மற்றும் காலாவதியான 431 புத்தகங்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன் அதற்காக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற இலங்கை விஞ்ஞான சேவை உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கும் நடைமுறைகளின் பிரகாரம் பெறப்பட வேண்டிய பட்டப்பின் படிப்பிற்காக ஏற்பட்ட செலவினங்களை மீளளிப்புச் செய்யும் போது திணைக்களத்திற்கும் உத்தியோகத்தருக்குமிடையே பிணைமுறிகள் கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை.

(உ) 2010 ஒக்தோபர் 2 ஆந் திகதி பட்டப்பின் படிப்பு பாடநெறிக்காக வெளிநாடு சென்று அந்தப் பாடநெறியைக் கைவிட்ட பின்னர் 2011 பெப்ரவரி 2 ஆந்

திகதி மீள வருகைதந்த உத்தியோகத்தரிடமிருந்து அந்த பாடநெறிக்காக அரசினால் செலவிடப்பட்ட ரூபா 2,612,867 தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.6 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 85 | 71 | 14 |
| (ii) | மூன்றாம் நிலை | 06 | 03 | 03 |
| (iii) | இரண்டாம் நிலை | 113 | 47 | 66 |
| (iv) | ஏனையவை(அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 74 | 51 | 23 |
| | மொத்தம் | 278 | 172 | 106 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 106 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. தலைப்பு 234 –உயர் நீதிமன்ற பதிவாளர்

### 5.1 கணக்காய்வின் நோக்கெல்லை

உயர் நீதிமன்ற பதிவாளர் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 செப்தெம்பர் 12 ஆந் திகதி உயர் நீதிமன்றப் பதிவாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான

தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 5.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 5.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் உயர் நீதிமன்ற பதிவாளர் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 5.4 இலிருந்து 5.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணாமை

திணைக்களத்தினால் 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மூன்று செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 700,000 தொகையான நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 06 செலவின விடயங்களுக்காக ரூபா 4,200,000 கூட்டுத்தொகையான மிகை ஏற்பாடு செய்யப்பட்ட காரணத்தினால் நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ரூபா 3,609,276 ஆக இருந்தது. அது அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 53 சதவீதம் தொடக்கம் 98 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி திணைக்களப் புத்தகத்தின் பிரகாரம் ரூபா 29,940,807 ஆக இருந்ததுடன் திறைசேரி கணனி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் மீதி ரூபா 29,872,562 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 68,245 தொகையான வேறுபாடு வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் திணைக்களத்தினால் நிதிப் பிரமாணம் 427 இன் பிரகாரம் இணக்கஞ் செய்து சீராக்குவதற்கு முடியாதிருந்தது.

(ii) 2013 சனவரி 08 ஆந் திகதி வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 77,560 தொகையான கடன் மீதியும், இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 3,750 தொகையான கடன் மீதியும், மரணித்த உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 1,500 தொகையான கடன் மீதியும், 2012 யூலை 24 ஆந் திகதி தொடக்கம் வேலையைக் கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 120,480 தொகையான கடன் மீதியுமாக ரூபா 203,290 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**5.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.5 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

திணைக்களத்தினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 451,315 ஆகும்.

**5.6 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 09 | 05 | 04 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 29 | 19 | 10 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 141 | 134 | 07 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 123 | 111 | 12 | - |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 06 | - | 06 |
| | மொத்தம் | 302 | 275 | 33 | 06 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 33 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. தலைப்பு – 235 சட்ட ஆணைக்குழுத் திணைக்களம்

### 6.1 கணக்காய்வின் நோக்கெல்லை

சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய கூற்றுக்கள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 28 ஆம் திகதி திணைக்களச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், காண்புகள், கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளின் போதியளவு செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும், நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைக்கப்பெற்ற பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமானளவு விரிவானதொரு கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது.

### 6.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 ஆம் 152 ஆம் ஏற்பாடுகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்கும் வகையில் பேணப்படுதல், தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பித்தல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது பிழைகளின் நிமித்தம் ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்களைத் கொண்டிராத கணக்குகளையும் இணக்கக்கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் அவற்றை நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடல் அமுலாக்குதல் மற்றும் பேணுதல் இப் பொறுப்புக்களில் உள்ளடக்கபொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்து பிரயோகித்தல், சந்தர்ப்பத்துக்கேற்றவாறு நியாயபூர்வமாக கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரித்தல் என்பனவும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**6.3 கணக்காய்வு அவதானிப்புகள்**

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, இதன் (அ) இல் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 6.4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகளைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒரு செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 50,000 தொகையான மொத்த ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 06 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்பு அச் செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டின் 29 சதவீதத்திலிருந்து 98 சதவீதம் வரையான வீச்சளவைக் கொண்டிருந்தது.

**6.4 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 4 | 3 | 1 |
| (ii) | மூன்றாம் நிலை | 2 | 1 | 1 |
| (iii) | இரண்டாம் நிலை | 15 | 7 | 8 |
| (iv) | ஆரம்ப நிலை | 8 | 7 | 1 |
| | மொத்தம் | 29 | 18 | 11 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறும் 11 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.